TNRM10-005541-2024



**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**
**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2026ம் ஆண்டு ஜனவரி திங்கள் 23ம் நாள் வெள்ளிக்கிழமை**

**Crl.M.P.No.1801/2025**
**in**
**Cr.No.194/2022 of Sayalkudi PS**

செல்வி
க.பெ.நாகராஜன்
மாதாகோவில் தெரு,
சாயல்குடி,
கடலாடி வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம் ......மனுதாரர்/புகார்தாரர்

/எதிர்/

அரசுக்காக சார்பு ஆய்வாளர்
சாயல்குடி காவல் நிலையம். ...எதிர்மனுதாரர்/குற்ற முறையீட்டாளர்.

/எதிர்/

1. மாணிக்கசெல்வி
2.அம்பிகா
3.முனீஸ்வரன்
4.பாலமுருகன்
5. கோபிநாத் (எ) கோபி
6. கோட்டைசாமி .. எதிரிகள்

1. பழனிமுருகன்
2. ராமாயி
3. காளிஸ்வரன்
4. இராமபாண்டி
5. ஜெகதீஸ் ....நீக்கப்பட்ட எதிரிகள்

1. பாலமுருகன்
2. கோட்டைசாமி ... சேர்க்கப்பட்ட எதிரிகள்

இம்மனு என் முன்பாக 25.02.2026ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது ஆட்சேபனை மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.வில்வதுரை அவர்கள் ஆஜராகியும், குற்ற முறையீட்டாளர் மற்றும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

சாயல்குடி காவல் நிலைய குற்ற எண்.194/2022 வழக்கில் குற்ற இறுதியறிக்கையில் நீக்கம் செய்யப்பட்ட ஐந்து எதிரிகள் மற்றும் புதிதாக சேர்க்கப்பட்ட இரண்டு எதிரிகள் மற்றும் பிரிவுகளையும் சேர்த்து வழக்கினை மேல்நடத்த உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபனை மனுவின் சுருக்கம்.**

கடந்த 2011ம் ஆண்டு மாணிக்க செல்வியும் அவரது கணவர் கிருஷ்ணமூர்த்தியும் புகார்தாரர் வீட்டிற்கு நேரில் வந்து கிருஷ்ணமூர்த்தி வெளிநாடு அழைத்துச் செல்லும்படி கேட்டுக் கொண்டார் என்றும் அதன்பின் கிருஷ்ணமூர்த்தியை கத்தார் நாட்டிக்கு ஓட்டுநர் வேலைக்கு புகார்தாரரின் கணவர் அனுப்பி வைத்தார் என்றும் எதிர்பாராதவிதமாக கிருஷ்ணமூர்த்தி வேலைக்கு சேர்ந்து மூன்று மாதத்திலேயே விபத்தில் இறந்து போனார் என்றும், அவரது உடலை சாயல்குடிக்கு கொண்டு வாருங்கள் எவ்வளவு செலவானாலும் செலவு செய்து உடலைக் கொண்டு வாருங்கள் நான் திரும்ப பணத்தைக் கொடுத்து விடுகிறேன் என்று மாணிக்கசெல்லி கூறியத்தால் புகார்தாரரின் கணவரும் ரூ. 3,60,000/– செலவு செய்து கிருஷ்ணமூர்த்தியின் உடலை சாயல்குடிக்கு, அனுப்பி வைத்தார் என்றும் அதன்பின் தற்போதுவரை புகார்தாரரின் கனாவர் செலவு செய்த பணத்தை அவ்வப்போது கேட்டு வந்த நிலையில் கடந்த 25.05.2022–ம் தேதியன்று புகார்தாரரின் கணவர் மாணிக்கசெல்வியிடம் நேரில் சென்று செலவு செய்த பணத்தை கேட்டுள்ளார் அப்போது அங்கு பிரச்சனை ஏற்பட்டு கைகலப்பில் முடிந்துவிட்டது என்றும், அதன்பின் மாணிக்கசெல்வி காவல் நிலையத்தில் தனது கணவர் நாகராஜன் மீது புகார் கொடுத்ததில் அவர்மீது சாயல்குடி

காவல் நிலைய குற்ற எண்:176/2022–ன் கீழ் வழக்குப்பதிவு செய்து புகார்தாரரின் கணவர் கைது செய்யப்பட்டு பின்பு கடந்த சில தினங்களுக்கு முன்பு ஜாமீனில் வெளிவந்தார் என்றும், சிறையிலிருந்து வெளியே வந்த புகார்தாரரின் கணவரை கொலை செய்ய வேண்டும் என்று மாணிக்கசெல்வி அவருடைய அக்கா அம்பிகா, மாணிக்கசெல்வியின் தம்பி பழனிமுருகன் மற்றும் மாணிக்கசெல்வியின் தாயார் ராமாமி, அம்பிகாவின் தம்பி பழனி (எ) பழனி முருகன் ஆகியோர்கள் சதித்திட்டம் தீட்டி 10.06.2022ம் தேதி, மாலை 17.00 மணியளவில் புகார்தாரரும், அவரது கணவரும் மூக்கையூர் ரோட்டில் உள்ள தங்களது Total GAS கம்பெனியில் வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது அம்பிகா, அவரது மகன்களான முனீஸ்வான், காளீஸ்வரன் (எ) காளிமகேஸ்வரன், ராமபாண்டி, ஜெகதீஷ் (எ) சதீஷ்குமார், மாணிக்கசெல்வியின் சகோதரர் பழனி (எ) பழனி முருகன் மற்றும் மாணிக்கசெல்லி, அவர்களுடன் வந்த கோபி (எ) கோபிநாத் மற்றும் அடையாளம் தெரிந்து பெயர் தெரியாத 4 நபர்கள் ஆகியோர்கள் ஒன்று சேர்ந்து கத்தி, அறிவாள், கம்பு ஆகியவைகளுடன் தங்களது கோல் கம்பெனிக்குள் நுழைந்து புகார்தாரரின் கணவரைப் பார்த்து ஏன்டா தேவடியா மகனே உனக்கு காச திருப்பி கொடுக்கனுமாடா எனக் கத்திக்கொண்டு பழனி (எ) பழனிமுருகன் இத்தோடு செத்து தொலைடா எனக்கத்திக்கொண்டு தன் கையில் வைத்திருந்த அருவாளால் புகார்தாரரின் கணவர் கழுத்தில் வெட்டியபோது தலையை சாய்த்துக்கொண்டதால் அவரது காதுக்கு அருகே வெட்டு விழுந்து ரத்த காயம் ஏற்பட்டது என்றும், புகார்தாரரின் காவர் தலையை திருப்பாவிட்டால் தலை துண்டாகியிருக்கும் என்றும், முனீஸ்வரன் என்ற காளிமகேஸ்வரன் தன் கையில் மலத்திருந்த அருவாளால் புகார்தாரரின் கணவர் வலது முழங்கலிலும், வலது தொடையிலும் வெட்டி இரந்த்த காயம் ஏற்படுத்தினார் என்றும், ராமபாண்டி தன் கையில் வைத்திருந்த அருவாளால் புகார்தாரரின் கணவர் வலது முழங்கலில் வெட்டி அடுத்ததாக இடது பக்க கழுத்தில் வெட்ட வந்தபோது புகார்தாரரின் கணவர் இடது கையல் தடுத்ததால் அந்த வெட்ட இடது கை மணிக்கட்டில் விழுந்து ரத்த காயம் ஏற்பட்டது என்றும், ஜெகதீஷ் (எ) சதீஷ்குமார் தன் கையில் சைத்திருந்த அருவாளால்

புகார்தாரரின் தலையில் இடது பக்கமும், இடது கை தோல் பட்டைக்கு அருகில் வெட்டி இரத்த காயம் ஏற்பட்டது என்றும், கோபி (எ) கோபிநாதன் மற்றும் மற்றும் அவர்களுடன் 4 நபர்கள் எல்லோருமாக சேர்ந்து தங்கள் கையில் வைத்திருந்த கத்தியால் புகார்தாரரின் கணவர் தலையை சுற்றிலும் குத்தி இரத்த காயம் ஏற்படுத்தினார்கள் என்றும், மாணிக்கவள்ளி, அம்பிகா இராமாயி ஆகியோர்கள் கையில் வைத்திருந்த கம்பால் புகார்தாரரின் கண்ணவரின் உடலெங்கிலும் அடித்து ஊமை காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும், புகார்தாரர் தடுத்தபோது, தன்னை பெண் என்றும் பாரமல் பழனி (எ) பழனிமுருகன் புகார்தாரரை வலது கண்ணத்தில் ஓங்கி அடித்து கீழே தள்ளி விட்டதில் தான் அங்கேயே மயங்கி விழுந்துவிட்டதாகவும் புகார்தாரரின் கம்பெனியில் வேலை செய்யும் பிள்ளையார்குளத்தைச் சேர்ந்த விஸ்வநாதன் என்பவர் கூச்சலிடவும் மேற்கண்ட நபர்கள் அங்கிருந்து தப்பி TNRM10–005541–2024ஓடிவிட்டனர் என்றும் காயப்பட்ட புகார்தாரானின் கணவனை ஆடோலில் தூக்கிக்கொண்டு சாயல்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதல் உதவி சிகிச்சைக்கு சேர்த்து பின்பு மேல்சிகிச்சைக்காக மதிவேந்தன் என்ற தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு கொண்டு சிகிச்சை அளிக்கப்பட்டது அதன்படி புகார்தாரரிடம் எழுத்து மூலமான புகார் மனு பெற்று 120B, 147, 148, 448, 294(b), 324, 307 IPC r/w 4 of TNPHW Act ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில், மேற்படி வழக்கில் தற்போது குற்ற முறையிடுவோரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் மேலே கூறப்பட்டுள்ள 5 எதிரிகள் நீக்கப்பட்டு 6 எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவே நீக்கம் செய்யப்பட்ட 5 எதிரிகளையும் சேர்த்து வழக்கு நடத்தக்கோரி ஆட்சேபனை மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## <u>தீர்வு</u>

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

5) மனுதாரர் தரப்பில் கடந்த 10.06.2022ம் தேதியன்று புகார்தாரர் அளித்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் சாயல்குடி காவல் நிலைய குற்ற எண்.1 94/2022பிரிவுகள் 120(b), 147, 148, 448, 294(b), 324, 307 இதச and 4 of TNPHW Act ன் கீழ் எதிரிகள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு சட்டப்பிரிவுகள் மாற்றம் செய்யப்பட்டும், சில எதிரிகளை நீக்கம் செய்யப்பட்டும் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி குற்ற இறுதியறிக்கையில் நீக்கம் செய்யப்பட்ட எதிரிகள் குறித்து மனுதாரரின் ஆட்சேபனைக்காக அறிவிப்பு அனுப்பப்பட்டதில் மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனை மனுதாக்கல் செய்துள்ளார்.

எதிரிகள் புகார்தாரரை தாக்கியதாக புகார் வாக்குமூலம் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகார் வாக்குமூலம் இவ்வழக்கில் நீக்கம் செய்யப்பட்ட எதிரிகளான பழனிமுருகன், இராமாயி, காளிஸ்வரன், இராமபாண்டி, ஜெகதீஷ் ஆகிய ஐந்து பேரும் மற்றும் சிலரும் சேர்ந்து வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக குறிப்பிட்டு புகார் வாக்குமூலம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு இவ்வழக்கின் புகார்தாரரான செல்வி என்பவருடன் பதிவு செய்யப்பட்ட விசாரணை வாக்குமூலத்திலும் நீக்கம் செய்யப்பட்ட ஐந்து எதிரிகளும் சம்பவத்தில் ஈடுபட்டதாக குறிப்பிட்டு புகார்தாரரிடம் புலன் விசாரணை அதிகாரியால் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு பின்னர் மறுவாக்குமூலத்தில் மேற்படி ஐந்து நபர்கள் சம்பவத்தில் ஈடுபடவில்லை என புலன் விசாரணை அதிகாரியால் வாக்குமூலம் பதிவு செய்யப்ப்ட்டுள்ளது. இவ்வழக்கின் புகார்தாரர் நீதிமன்றத்தில் ஆஜராகி கொடுத்த ஆட்சேபணை மனுவில் இவ்வழக்கில் நீக்கம் செய்யப்பட்ட ஐந்து எதிரிகளும் சம்பவத்தில் ஈடுபட்டார் என கூறியுள்ளார்.

மேற்படி ஆட்சேபனை மனுவையும் வழக்கின் ஆவணங்களையும் பரிசீலனை செய்யும் போது குற்ற இறுதி அறிக்கையில் நீக்கம் செய்யப்பட்ட ஐந்து எதிரிகளும் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டிருக்க வாய்ப்புள்ளது என்பதாலும் வழக்கில் நீக்கம்

செய்யப்பட்ட எதிரிகள் சம்பவத்தில் ஈடுபட்டார்களா என்பதை வழக்கின் இறுதி விசாரணையின் மூலம்தான் அறிய முடியும் என்பதாலும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும், வழக்கில் நீக்கம் செய்யப்பட்ட 5 எதிரிகளான பழனிமுருகன், இராமாயி, காளிஸ்வரன், இராமபாண்டி, ஜெகதீஷ் ஆகியோர் குற்றம் புரிந்திருக்க முதல் தோற்ற ஆதாயம் இருப்பதாக தெரிய வருவதால் குற்ற இறுதியறிக்கையில் நீக்கம் செய்யப்பட்ட பழனிமுருகன், இராமாயி, காளிஸ்வரன், இராமபாண்டி, ஜெகதீஷ் ஆகியோர்களை சேர்த்து வழக்கினை மேல்நடத்துவதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் தீர்மானித்து ஆட்சேபனை மனுவை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 23.01.2026 இன்று அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.01.23 19:27:25 +0000

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.